

# தெய்வ மலர்

அமரர்

## திருவாட்டி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி

அவர்களின்

நினைவு அஞ்சலி மலர்

17.07.2006

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# தெய்வக்காணிக்கை

யாழ் / கொழும்புத்துறை சிவயோக சுவாமிகளின்

அணுக்கத் தொண்டரும்

கைதடி திருவாளர் செல்லப்பா முத்துக்குமாரசுவாமி

அவர்களின் அன்புநிறை இல்வாழ்க்கைத்துணைவியாரும்

அமரர்கள் திரு தம்பு மயில்வாகனம்

திருமதி சின்னத்தங்கம் மயில்வாகனம்

ஆகியோரின் செல்வப் புத்திரியும்

கைதடி வீரகத்திப்பிள்ளையாரின் சீரிய பக்தையும்,

கைதடி மார்க்கண்டு சுவாமிகளின் பணிவு மிகு

தொண்டரும்

எம் குடும்பத்தின் அணையாத அன்புத் தீபம்

## திருவாட்டி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி

அவர்களின் பொற்பாதங்களில் அன்புக்

காணிக்கையாக இத் தெய்வமலரைச்

சமர்ப்பணம் செய்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

மண்ணில்
குழந்தையாக
28
★
06
★
1936



விண்ணில்
தெய்வமாக
02
★
07
★
2006

அமரர்
## திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி

திதிநாள் ஆனித்திங்கள்
வளர்பிறை சப்தமி

**திதி வெண்பா**

ஆள்விய வாண்டதன் ஆனிவளர் திங்களின்
நீள் திதி சப்தமி நாள்தனில் - மீள்காணாத்
தெய்வமாகித் துயின்றநம் தெய்வநா யகியெனும்
தூய்மனப் புனிதத்தாள் தான்

பாவாக்கம் : "அநுவைநா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவயோகசுவாமிகளின் மகாவாக்கியங்கள்.

(i) **ஒரு பொல்லாப்பும் இல்லை**

THERE IS NO EVIL

(ii) **நாம் அறியோம்**

WE KNOW NOT

(iii) **எப்பவோ முடிந்த காரியம்**

IT HAD BEEN DETERMINED
AGES AGO

(iv) **முழுவதும் உண்மை**
ALL IS TRUTH

## நான் யார்

நீ உடம்பன்று மனமன்று, புத்தியன்று சித்தமன்று, நீ ஆத்மா. ஆத்மா ஒரு நாளும் அழியாது. இது மகான்களுடைய அநுபவ சித்தாந்தம். இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக்கடவது.

ஆனால் நீ கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. அதாவது தருமநெறியிற் பிசகாதே. எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய். கடவுள் உள்ளும் புறமும் உள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருச்சிற்றம்பலம்*

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற்கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே

## திருவாசகம்

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ
அன்பொடு தன்னை அஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம் அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருப்புராணம்

மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து வளைக்கை மானி
செங்கமலத் திருமடந்தை கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப் பாவை
எங்கள் பிரான் சண்பையர்கோன் அருளி னாலே
இருந்தமிழ்நா டுற்ற இடர் நீக்கித் தங்கள்
பொங்கொளி வெண் திருநீறு பரப்பி னாரைப்
போற்றுவார் கழல் எம்மால் போற்ற லாமே

## திருப்புகழ்

காலனிடத் தணுகாதே காசினியிற் பிறவாதே
சீலவகத்திய ஞான தேனமுதைத் தருவாயே
மாலையனுக் கரியோனே மாதவரைப் பிரியானே
நாலுமறைப் பொருளோனே நாககிரிப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்

**திருச்சிற்றம்பலம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சிவயோக சுவாமிகளின் நற் சிந்தனை

## தெய்வமிது தானே

அன்னைபிதாக் குருவாகி யாண்டுகொண்ட தெய்வம்
அடியவர்தம் மனத்திலே ருசிக்கின்ற தெய்வம்
என்னையெனக் கென்னாலே யறிவித்த தெய்வம்
எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற தெய்வம்
முன்னைவினை யெல்லாம் முடித்தாண்ட தெய்வம்
மூதாதை மாரெனக்குக் காட்டிவைத்த தெய்வம்
தென்னைபனை சேரிலங்கை வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே 1

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பளிக்குந் தெய்வம்
காணாத காட்சியெல்லாங் காட்டுகின்ற தெய்வம்
நில்லாத நீர்சடைமேல் நிற்கவைத்த தெய்வம்
நெற்றியின்மே லொற்றைக்கண் நேரவைத்த தெய்வம்
எல்லார்க்குந் தெய்வ மென்னுடைய தெய்வம்
இதையறிந்து வாழுவார் எல்லாருந் தெய்வம்
செல்லாரு மிலங்கையில் வாழ்கின்ற தெய்வம்
சிவனென்ற நாமமுள்ள தெய்வமிது தானே 2

நம்பினபேர் தமக்கருளை நயந்தளிக்குந் தெய்வம்
நாதாக்கள் போற்றுகின்ற மெய்ஞ்ஞானத் தெய்வம்
வெம்பிணிக்கு மருந்தாக விளங்குகின்ற தெய்வம்
வேதாந்தத் தெய்வமுயர் சித்தாந்தத் தெய்வம்
அம்பிகைதம் பாகமா யமர்ந்திருக்குந் தெய்வம்
அவரவர்க்கு அதுவதுவா யிருக்கின்ற தெய்வம்
தும்பிமுக னறுமுகவன் தோத்திரஞ்செய் தெய்வம்
சோலைசூழிலங்கைவாழ் தெய்வமிது தானே 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மைக்கும் மறுமைக்குந் துணையான தெய்வம்
எழிலாருஞ் செஞ்சடையில் மதிவைத்த தெய்வம்
அம்மையா யப்பனா யாதரிக்குந் தெய்வம்
அவனிமே லென்போல விளங்குகின்ற தெய்வம்
பொய்ம்மாயச் செருக்கெல்லாம் புறக்கணிக்குந் தெய்வம்
போதாரும் மலர்தூவிப் போற்றுகின்ற தெய்வம்
செம்மைசே ரிலங்கையிலே வாழுகின்றதெய்வம்
சித்தத்துட் டித்திக்குந் தெய்வமிது தானே 4

பொறியைந்தும் வென்றவர்பாற் பொருந்துகின்ற தெய்வம்
போக்குவர வில்லாமல் நிறைகின்ற தெய்வம்
அறிவொன்ற நினைப்பவர்பா லமர்ந்திருக்குந் தெய்வம்
அம்புவியில் மாமனாய் வழக்குரைத்த தெய்வம்
குறியொன்று மில்லாமற் கூத்தாடுந் தெய்வம்
குழந்தைவடி வேலவனைக் கொண்டாடுந் தெய்வம்
விருப்புவெறுப் பில்லாத தெய்வமிது தானே 5

**மலர்**

மரத்திலே மலராத வாசமலர்
வாசவனும் வைத்து வளர்த்தமலர்
சிரத்திலே எப்போதுஞ் சேரும்மலர்
தீயமனம் வாராமல் காக்கும்மலர்
கரத்திலே நாமெடுத்துக் காணும்மலர்
கதிக்குவழி யிதுவென்னக் காட்டும்மலர்
வரமென்னுங் கொடியிலே பூத்தமலர்
வாணாளெல்லாம் வாடாத மாமலரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## திருவருள் தருவாயே

*இராகம் -மோகனம்* *தாளம்-ஆதி*

**பல்லவி**

தெய்வமே திருவருள் தருவாயே நீ

**அநுபல்லவி**

வையக மீதில் வணங்க அறியேன்
பொய்யும், புலையுங் கொலையுந் தவிரேன்
(தெய்வமே)

**சரணங்கள்**

கையும் மெய்யுங் கருத்துக் கிசைய
ஐயா தந்தனை யதையா னறியேன்
மெய்யா யுன்றன் மெல்லடிக் கபயம்
மேலும் மேலும் உனையான் வேண்டுவன் (தெய்வமே)

செந்நெலுங் கன்னலுஞ் செறியும்நல் லூரில்
தேசிகன் தாசன் யோகசுவாமி
சொல்லுங் கீதம் சொல்லுவார் கேட்பார்
துன்பம் நீங்கி யின்ப மோங்கும் (தெய்வமே)

## கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வம்

*இராகம் -எதுகுலகாம்போதி* *தாளம் - மிஸ்ரம்*

**பல்லவி**

கருத்தில் கருத்தாகி யிருக்கின்ற தெய்வமே
கடைக்கண் பார்நீ தெய்வமே

**அநுபல்லவி**

ஒருத்தர் துணையுமில்லை யுன்றுணை யல்லாமல்
உலகுயிர் பரமாகி நடிக்கின்ற செல்வமே (கருத்தில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரணம்**

எங்கெங்கு சென்றாலும் அங்கெங்கும் நீயே
ஈசா மதுராபுரி வாசா மீனாட்சி
நேசனே சொக்கநாதா யோகனுக்கருள் தாதா
நின்று மிருந்துமுனை யென்றென்றும்
போற்றநான் (கருத்தில்)

## அனைவருக்குந் தெய்வம் ஒன்றே

அனைவருக்குந் தெய்வம் ஒன்றே - அதை
அறிந்துலகில் வாழ்வது தொண்டே 1

முனைந்துநிற்கும் காமக்குரோதம் போக்கிப் - பின்பு
மூவரையுந் தேவரையும் ஏவலாக்கு 2

நெஞ்சுருகு மடியார்கள் கூட்டம் - இந்த
நீணிலத்தில் நன்மையெல்லாங் கூட்டும் 3

வினைப்பகையை வெல்வதற்கு மார்க்கங் - குரு
வேந்தன் தந்ததிரு வாக்கு 4

தினைத்துணைப் போதும்மற வாமல் - சிவத்
தியானத்தில் தினந்தினம் மூழ்கு 5

மனத்துயரை நீக்கநல்ல மருந்து - குரு
வாக்கியமொரு பொல்லாப்பு மில்லை 6

நினைத்தபடி நீணிலத்தில் வாழ்வோம் - நாங்கள்
நித்தியரா மென்பதை நாளும்மறவோம் 7

அயலுனக் கில்லையென்று பெரியோர் - சொன்ன
அந்தரங்க மறிந்துநீ திரிவாய் 8

முயல முயலவின்பந் தேக்கும் - பொல்லா
மூவித ஆசைகளை நீக்கும் 9

சுயநல மடியோடே மடியும் - சுருதி
சொன்ன சுவானுபவம் படியும் 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து) 1

அட்ட வசுக்களுங் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து) 2

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து) 3

பஞ்சப் புலன்களுங் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம் (அத்து) 4

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து) 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வாழ்க்கைத் துளிகள்

நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஈழத்திரு நாட்டின் வடபகுதி வடமாகாணமாகும். இப் புண்ணிய பூமியின் நிலவளமும் நீர்வளமும் அமைந்து உயர்ந்த மரங்கள் நிறைந்து காணப்படும் மருத நிலம் சூழ்ந்த தென்மராட்சியின் செழிப்புற்ற ஊர் கைதடியாகும். அவ்வூரில் சைவசமயப் பண்பாட்டுடன் இனிது வாழ்ந்த மயில்வாகனமும் (கணக்காளர்) அவரது இல்லக் கிழத்தியாகிய சின்னத்தங்கமும் முற்பிறப்பில் ஆற்றிய தவத்தின் பயனாகவும் கைதடி வீரகத்திப் பிள்ளையார் திருவருளாலும் தோன்றிய குழந்தைகள் எழுவர். அவர்களுள் இரண்டாம் மகவாகத் தெய்வநாயகி 28-06-1936இல் சித்திரை நட்சத்திரத்தில் பிறந்தார். விமலாதேவி, யோகேஸ்வரி, தையல் நாயகி, சிவயோகசுந்தரம், சுகாதார அமைச்சில் கடமையாற்றும் யோகவிநாயகன், அமரர் யோககுருநாதன் ஆகியோர் அவரது உடன் பிறந்தவர்களாவர்.

தெய்வநாயகி பெற்றோர் இன்புறும் வண்ணம் பிள்ளைப் பருவங்களைக் கடந்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து ஐந்தாம் அகவையை அடைந்தார். பெற்றோர் அவருக்குரிய கல்வியை ஊட்ட விரும்பினர். அதன் பயனாக அவர் ஆரம்பக்கல்வியைக் கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியைக் கைதடி கிறிஸ்தவ மிஷனரிப் பாடசாலையிலும் சிரேஷ்ட கல்வியைச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் மேற்கொண்டார். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்ததும் உயர்கல்வியை இந்தியாவில் பயில விரும்பினார். எனவே திருச்சி Holy Cross Convent இல் இடம் கிடைத்துத் தெய்வநாயகி பட்டப்படிப்பைத் தொடந்தார். அவர் இரசாயனத்தை விசேட பாடமாகப் பயின்று 1956ம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் முதலாம் வகுப்பில் தேறினார். அக்காலம் விஞ்ஞானப் பட்டதாரிகள் அரிதாக இருந்ததால் 1956ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிலேயே அவருக்கு ஆசிரிய நியமனம் நீர்கொழும்பு ஆவா மாரியா கொன்வென்ற் என்னும் பாடசாலையில் கிடைத்தது. அங்கே ஒரு ஆண்டு பணியாற்றிய பின் 1957ம் ஆண்டு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கு மாற்றம் பெற்றார். அன்று தொட்டு 1990ம் ஆண்டில் இளைப்பாறும் வரையும் 33 ஆண்டுகள் இரசாயன ஆசிரியராகப் பணியாற்றினார். அவரது கற்பித்தற் திறமையை அதிபர்களும் கல்வி அதிகாரிகளும் பாராட்டினர் என்பதையும் குறிப்பிட வேண்டும். அவரிடத்தில் கற்றோர் வைத்தியர்களாகவும் பொறியியலாளராகவும் பிரகாசிக்கின்றனர். சிலர் உயர்பதவிகளையும் வகிக்கின்றனர்.

தெய்வநாயகி இந்து மகளிர் கல்லூரியில் நியமனம் பெற்ற அதே ஆண்டில் பெற்றோர் அவருக்குக் கைதடியைச் சேர்ந்த செல்லப்பா முத்துக்குமாரசாமியைத் திருமணம் செய்து வைத்தனர். அவரும் தமது துணைவியாருக்குத் தகுந்தவராகவே இருந்து இருவரும் இல்லற வாழ்க்கையை இனிது நடத்தினர். அவரைப் பற்றியும் சிறிது கூறுவது பொருத்தமாகும். முத்துக்குமாரசுவாமி அவர்கள் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்விகற்றார். வைத்தியத் துறையில் கற்கத்தகுதியிருந்தும் தவிர்க்க முடியாத காரணத்தினால் தொடரவில்லை. விஞ்ஞான ஆசிரியராகச் சேவையாற்ற விரும்பி மஹரகம பயிற்சிக்கல்லூரியில் 1954லிருந்து 1955 வரை பயிற்சி பெற்றுத் தான் கற்ற கல்லூரியிலே விஞ்ஞான ஆசிரியராக, உப அதிபராக 1982 லிருந்து 1986 வரை பணியாற்றி ஓய்வு பெற்றார்.

இம் மனமொத்த தம்பதியினருக்கு இல்லற வாழ்வின் பயனாக இரு பெண்குழந்தைகளும் ஓர் ஆண் மகவும் தோன்றினர். அவர்களுக்குச் சிறந்த கல்வியை ஊட்டினர். மூத்தவரான அனுசூயாவுக்கு யாழ்வைத்தியசாலையில் பிரபல சத்திர சிகிச்சை நிபுணராக விளங்கும் ரவிராஜ் என்பவரைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தெடுத்து மணம் செய்து வைத்தனர். அவர்களுக்குக் குகப்பிரியன் என்ற நாமத்தை உடைய மகனும் பிரதாகினி என்ற பெயரை உடைய மகளும் உளர்.

BSc இரசாயனவியல் துறையில் விசேட பட்டம் பெற்ற மகளான கௌரி அரசாங்க இரசாயனப் பகுப்பாளர் திணைக்களத்தில் இரசாயனப் பகுப்பாளராகப் பணியாற்றுகிறார். அவருக்கு ஏற்ற துணையாக ரமணாவைத் (B.E. M.B.A.) நிர்வாக இயக்குனர் - Computer Land கொழும்பு) தேர்ந்தெடுத்து மணம் செய்து வைத்தனர். இல்லறவாழ்வின் பயனாக விஷ்ணுப்பிரியன், அஷ்வினி ஆகியோர் பிறந்தனர். இப்பேரக்குழந்தைகளைப் பாசத்துடன் அரவணைத்து அவர்களின் மழலைச்சொற்களையும் கேட்டுக் குறும்புகளையும் பார்த்துப் பேரனும் பேர்த்தியும் இறும்பூதெய்தினர். புத்திரனாகிய யோககுமாரன் இலண்டன் பாணட் சொலிற்றெயார் நிறுவனத்தின் முகாமைத்துவக் கணக்காளராகப் பணியாற்றினார். மகனது உயர்ச்சியைக் கண்டு பெற்றோர் இறும்பூது எய்தியிருக்கும் வேளையில் 2003ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 14ம் திகதி யோககுமாரன் வாகனவிபத்தில் அமரரானார். ஆற்றவொண்ணாத இம்மறைவு பெற்றோரைத் துன்பச்சாகரத்தில் ஆழ்த்தியது. இதிலிருந்து அவர்கள் கரையேறத் தெரியாது கலங்கிக் காலம் கழித்தனர். ஈற்றில் இது இறைவன் விதித்த நியமமே எனச் சிறிது ஆறுதல் அடைந்து வாழ்ந்தனர்.

அமரர் தெய்வநாயகி இளம் பராயந் தொட்டுப் பெற்றோரின் அடிச்சுவட்டைப் பின் பற்றிச் சமய சீலராக, கடவுள் வழிபாடுடையவராக, விரதங்கள் அனுஷ்டிப்பவராக விளங்கினார். அதற்கேற்பக் கணவரும் அமைந்ததனால்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

என்னும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப இல்லற வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்தது. யோகசுவாமி, மார்கண்டு சுவாமி ஆகியோரின் அணுக்கத்தொண்டராக அவர்களின் நற்சிந்தனைகளில் ஈடுபாடுடையவராக வாழ்ந்தார். மார்க்கண்டு சுவாமிகளது ஆச்சிரமம் அமரரது வீட்டு வளவினுள் இருந்ததனால் அவருக்கு நெருங்கிப் பணிவிடை புரியும் பாக்கியம் கிட்டியது. தெய்வநாயகி தன்னலம் கருதாது தன்குடும்பத்தவர்களிடத்தும் உறவினர்களிடத்தும் நண்பர்களிடத்தும் அன்பு, இரக்கம் உடையவராய் இருந்தார். பரம்பரைச் சொத்தாகக் கருதப்படும் மேற்கூறப்பட்ட பண்புகளுடன் அனுதாபமுமுடையவராய் எவருக்கும் உதவி செய்யும் மனப்பான்மை உடையவர். அவர் 49 ஆண்டுகள் மணவாழ்க்கையைக் கண்டவர். அக்காலத்தில் வாழ்க்கையில் ஏற்பட்ட சுக துக்கங்களை அனுபவித்தும் பலருக்கும் சிறந்த எதிர்பார்ப்புகளையும் வழங்கி மற்றவர்க்காகத் தமது நேரத்தையும் செல்வத்தையும் சந்தோஷத்தையும் தியாகஞ் செய்தவர்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார் என்றும் உரியர் பிறர்க்கு

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப இலக்கணமாக வாழ்ந்தார். இளம்சந்ததியினருக்கு ஓர் உதாரண சீலராக விளங்கினார் என்று கூறின் மிகையாகாது.

இச்சிறப்புக்களைக் கொண்டவராகிய தெய்வநாயகி சிலகாலம் சுகயீனமுற்றிருந்து எழுபது ஆண்டுகள் பூரணவாழ்க்கை வாழ்ந்து 2.7.2006 பூர்வபக்கச் ஸப்தமித் திதியில் வீரகத்திப் பிள்ளையார் பாதாரவிந்தங்களை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கண்ட தெய்வம்

1959ம் ஆண்டு யாழ் இந்துமகளிர் கல்லூரியில் சக ஆசிரியையாக எனக்கு அறிமுகமானவர் திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி.

சாந்தமான வசீகரமுகம், அதில் தவழும் புன்னகை, அமைதியான சுபாவம், நெஞ்சத்துள் புதைந்துள்ள தெய்வநம்பிக்கை, நட்பின் பண்பு, கடமை உணர்வு, மற்றவர்களின் இடுக்கண் களைய உதவும் மனப்பாங்கு - இவை அனைத்தும் சேர்ந்த ஒரு உருவம் தான் 'தெய்வம்' என சக ஆசிரியைகளினால் அன்பாக அழைக்கப்பட்ட திருமதி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி.

பழகுவதற்கு இனிமையானவர், தோற்றத்தில் எளிமையானவர், கட்டுப்பாட்டில் இறுக்கமானவர் என நான் அவருடன் பழகிய காலந்தொட்டே உணர்ந்து கொண்டேன். அன்னாரின் நட்புக் கிடைத்தமை எனது பாக்கியமாகவே கருதுவேன். அவரின் மறைவு என்றென்றும் எனது உயிர் உள்ளவரையும் மறக்க முடியாத ஒரு சோக நிகழ்வு.

யாழ் இந்துக்கல்லூரியுடன் எனக்கு நீண்ட பாரம்பரியம் உண்டு. எனது தந்தையார், கணவர், சகோரர்கள், மகன் ஈறாக எமது யாழ் இந்து தொடர்பிருந்தது. அந்தக் கால கட்டத்தில் திரு முத்துக்குமாரசுவாமி அவர்களுடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு இருந்தது. இந்தப் பண்பான இனிய சுபாவம் கொண்டவருடன் பழகக் கூடிய வாய்ப்பினால் தெய்வத்துடனான எனது தொடர்பும் நட்பும் மேலும் வலுவடைந்தது. இதனால் எங்கள் நட்பு ஒரு குடும்ப உறவாகவே மாறியிருந்தது. தெய்வத்தின் பண்பாடுகளுக்கு இணையாக அவரது கணவரும் இருந்தமையினால் இச்சோடி எப்போதும் சிறந்த முன்மாதிரியாக விளங்கிய தம்பதியினர் என்றால் மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் என்ற ரீதியில் தெய்வத்திடம் காணப்பட்ட சீரிய பண்புகள் பற்பல. மாணவர்களில் அவர் காட்டிய அக்கறை, பரிவு, மாணவர்களின் பிரச்சினைகளை அனுகியமுறைகள், அவரிடம் காணப்பட்ட தனித்துவமான இயல்புகள். தொழில் சார் முறையில் அவர்காட்டிய இன்னும் பல இயல்புகள் ஏராளம். நேரம் பிந்தாத அவரின் வகுப்பறைப் பிரவேசம், அடுத்தபாட ஆசிரியையும் காத்து நிற்கவைக்க விரும்பாத மனப்பாங்கு குறிப்பிடத்தக்கவை. இரசாயனவியல், விஞ்ஞானம் அவர் கற்பித்த பாடங்கள். இவற்றைக் கற்பிக்கும் அலகுகளைச் சிறந்த முறையில் ஆயத்தம் செய்து, கற்பித்தல் செய்முறைகளில் அவர் காட்டிய அதீத அக்கறை போற்றக் கூடியவை. ஒருவித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் தனக்கே உரிய முறையில் அமைதியாகவும் ஆணித்தரமாகவும் பாடங்களைக் கற்பிப்பார். வகுப்பிலும் வெளியேயும் மாணவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாட்டிலும் அவர் அக்கறை கொண்டிருந்தார். இவை எல்லாவற்றாலும் மாணவர்களும் அவர்மேல் மதிப்பும் பக்தியும் கொண்டிருந்தனர்.

கற்பித்தலில் மாத்திரமல்லாமல் பாடசாலைப் புறநடவடிக்கைகளிலும் சலிக்காது, அதிபர் சக ஆசிரியைகளுக்கும் அவர் வழங்கிய ஒத்துழைப்பு, பெற்றோர், சமூகத்துடன் அவர் பேணிய தொடர்பு இவைகள் யாவும் எல்லோர் மத்தியிலும் அவருக்கென ஒரு தனி மதிப்பைக் கொடுத்தன.

பெற்றோர் இருவரினாலும் அவர்களின் பிள்ளைகளும் அறிவு, ஆற்றல், நற்பண்புகளைக் கொண்டவர்களாக வழிநடாத்தப்பட்டார்கள். தங்கள் இரு மருமகன்களின் அறிவு, சேவை மனப்பாங்கு பண்பாட்டுக் கோலங்கள் பற்றி அடிக்கடி நாம் உரையாடுவோம். இதில் தனது திருப்தியையும், சந்தோஷத்தையும் வெளிப்படுத்துவார்.

எங்கள் உணர்வுகளையும், உள்ளங்களையும் தொட்ட இன்னொரு சோகநிகழ்வு அவர்களின் புத்திரனின் அகால மரணம். தாயுடன் சேர்ந்து பகிர்ந்த பிரிவின் துயரை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாகிய அந்த நல்ல மனிதருக்கு, இந்தத் தெய்வத்தின் பிரிவும் சேர்ந்து விட்டது. இந்த இரு பிரிவுகளையும் தனக்கே உரிய பொறுமையுடனும், தெய்வநம்பிக்கையாலும், மகள்மார், மருமகன்கள், பேரப்பிள்ளைகள் அனைவரையும் ஊன்றுகோலாகக் கொண்டு தாங்கும் சக்தியை இறைவன் அவருக்கு அருள்வார் என்பது திண்ணம்.

எங்களைப் பிரிந்துள்ள திருமதி தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**திருமதி குணபாக்கியம் சண்முகலிங்கம்**
C33-2/2, சொய்சாதொடர்மாடி
மொரட்டுவை.

## சிவயோகம் பாவனை.

தெய்வத்தை நம்பு முழுமனத்தோடு நம்பு; உலகில் உனக்கினியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும் போதும், கிடக்கும் போதும் நினை. உனது நரம்பிலும், தசையிலும், இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுளைக் கும்பிடுதல் வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகும். ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Our Favourite Teacher

Theivanayaki our teacher who taught chemistry at Hindu Ladies College, Jaffna passed away on 2nd July 2006. Born in the year 1936 who was a few years older than us was a friend to us more than a teacher. A young graduate qualified in India came to our school with a smiling face like a rose.

She was the daughter of late Mr. Mylvaganam and late Sinnathangam who were devotes of Yogaswami the famous "Saint" who lived at Columbuthurai and was the second in the family of seven . Whose name Theivanayaki was the name of godess Thevayani, one of Lords Murugan's wives.

She joined Hindu Ladies College in the year 1957 and we were the first batch of students to be taught by her and she continued teaching in the same school till retirement. We sat for the advanced level and her pupils got credit passes in chemistry and she called each pupil and congratulated them. Few pupils entered the University and are holding good jobs. Her daughter Gowry is a Govt. Analyst and Sivahamy Ambalavanar too is working in a leading private company at Colombo-05. I must mention Uma Cumaraswamy, the Vice chancellor of the open University Nawala was also pupil of hers. One of the admirable features of our teacher was, she never showed partiality among the students. She would be next to us during the practical hours in the laboratory and like a friend would guide us.

In the same year she joined our school, she got married to one. Mr. Muthukumaraswamy who was her own cousin and whose parents themselves were devotes of Yogaswamy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sri Lanka is said to be the pearl of the Indian Ocean. "Muthu" in our language is called pearl and swamy everybody knows God supreme. So our godess Theivanayaki married the pearl of the Indian Ocean. What a marvellous marriage ! They lived a united and a devoted life. In the "Ashramam" Sivathondan in Jaffna on the Sivaraaththri day Mr. Muthukumaraswamy being the treasurer would be playing an active part and I could see his wife always by the side of him, assisting him. I keep at a distance giving her like due respect as a teacher but she would come around and talk to me like a friend and see to the crowd, whether they had their meal of rice the following morning. As I wrote earlier she always makes the people at ease. In other words she was modest, simple and a charming lady and this goes to Mr. Muthukumaraswamy as well. A marriage made in heaven. She had three children two daughters Anushuya and Gowry and a son Yogakumaran born after eleven years. He went to London to do his studies. As they say man proposes and God disposes the only son met with a fatal accident miles away from the parents and died. This made them lose interest in life and they were down hearted. In the year 2004 she fell sick and operated the following day.

Fortunately I visited her house at Arethusa lane where she lived with Anushuya who is married to Dr. Raviraj General Surgeon. How thrilled I was to see our old teacher still with the smiling face, but my smile disappeared when she said that she was suffering from the dread full disease cancer. But smile was still on her face. What an iron lady she was. I know of people when they get any unbearable sickness get frustrated their face becoming horrible and jumps at people for the slightest disturbance but Alas ! Our teacher was an exceptional lady with the same charming smile. I happened to go in her house in the early hours of the day too. She would be up hair combed well with the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

holy ash on her fore-head with the "Kunkumam Pottu" and I admire her. Not only what I was shocked to see her coming out of the Kitchen. "Miss" (that was how we call her) could you do work in the kitchen, for which the reply would be "I would have to do my part of the work without taxing anyone" Her only wish was not to be a burden to anybody. It was not the sickness that worried me. She would say that I must depart form this world without being a burden and her wish was granted and she passed away peacefully on 2nd July 2006 exactly after two and a half years of her son's death and all are sure she is now with her son in heaven.

May her soul rest in peace.

By
Old Pupils of Hindu Ladies College
Jaffna.

## சிவயோகம் பாவனை.

சிவபெருமான் அத்துவிதமாக இருக்கிறார். அடியேன் அவரே எனத் தியானிக்கும் மகிமை எனக்குண்டு. ஒருவன் எப்படிப் பாவனை செய்கிறானோ அவன் அப்படி ஆகிறான். ஆகையால் "நான் அவனே" என்று தியானஞ் செய் அப்போது உன் செய்கைகள் அனைத்தும் அவன் செய்கையேயாகும். அவனைத் தவிர வேறு பொருள் இல்லை. அவனே அனைத்தும் அப்படியான அவனே தன்னைப் பல கோலங்களாக்கி விளையாடுகிறான்.

அவருக்குப் பிறப்பிறப்பில்லை. ஆதியந்தமில்லை. ஒரு மாறுதலுமில்லை. முழுதுமுண்மை.

ஓம் சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

எம் குடும்பதீபம் திருவாட்டி தெய்வநாயகி முத்துக்குமாரசுவாமி அவர்கள் சிவபதம் எய்திய செய்தி அறிந்து நேரிலும் தொலைநகல், தொலைபேசி, மின் அஞ்சல் மூலமும் ஆறுதல் தெரிவித்த யாவருக்கும் மலர்வளையம் மற்றும் மலர்மாலை அணிவித்தோர்க்கும் இறுதிக் கிரிகைகளிலும் ஆத்ம சாந்திப் பூஜைகளிலும் நேரில் கலந்து கொண்ட உற்றார் உறவினர், நண்பர்கள், நோயுற்றவேளையில் பல்வேறுவழிகளில் உதவிபுரிந்தோர் யாவருக்கும் எம் இதய பூர்வமான நன்றிகள்

33, 1/1, அருத்துசா லேன்
வெள்ளவத்தை
கொழும்பு-06.

கணவர்,
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
குடும்பத்தினர்

******

## *Our Sincere Thanks*

*We wish to express our sincere, heart felt gratitude to all the friends, relations and all others her students, who have shown their immense support and sympathy the demise of our beloved family beacon Mrs. Theivanayaki Muththukumaraswamy and also all who have called at their residence, offered floral tributes, sent messages of condolence and assisted in numerous ways at the most difficult time.*

33, 1/1, Arethusa Lane
Wellawatte,
Colombo - 06

Husband,
Children, in-Laws
Grand children
Family members



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையல்நாயகித் தாயே

இது நல்ல தருணம் அம்மா

வையம் புகழும் வண்ணை மாநகரில்

வாழும் வாணியே சிவகாமியே

கந்தசாமியை தந்த

தையல்நாயகித் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org